வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் ரேமினல் லங்கா (தனியார்) ("கம்பனி") கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்ட கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்:

அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

ஆ) எனது அபிப்பிராயத்தில்:

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களும் விளக்கங்களும் நான் பெற்றிருக்கின்றேன் என்றும், மற்றும்

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 2 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை - நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் | |
| (i) 4.2.2 ஆம் வழிகாட்டல் | நிதிசார் மற்றும் பௌதீக ரீதியான மாதாந்த செயலாற்றல் கூற்று, செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, திரவத்தன்மை நிலைமை மற்றும் கடன் பெறுதல்கள் மற்றும் பதவியணியினர் நிலைமைகள், புதிய ஆட்சேர்ப்புக்கள் உள்ளடங்களாக மனித வளங்கள் தொடர்பான கூற்றுக்கள், ஒவ்வொரு மாதமும் சபைக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4.3 ஆம் வழிகாட்டல் | சபைக் கூட்டங்களின் கூட்டக்குறிப்புக்கள் அவ்வாறான கூட்டங்களின் உறுதிப்படுத்தலின் பின்னர் 10 நாட்களுக்குள் வரிசை அமைச்சின் செயலாளர்க்கு |

| | | |
|---|---|---|
| | | அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 5.1.1 ஆம் வழிகாட்டல் | 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டமொன்றை கம்பனி தயாரிக்க வேண்டியதுடன் சுழற்சி திட்டமொன்றாக அதனை வருடாந்தம் நாளதுவரையாக்கல் வேண்டும். நாளதுவரையாக்கப்பட்ட வருடாந்த பாதீட்டுடன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரதிகள் நிதியாண்டின் ஆரம்பிப்புக்கு முன்னர் 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அந்த தேவைப்பாடுகளுடன் கம்பனி இணங்கியிருக்கவில்லை. |
| (iv) | 5.2.2 (ஆ) வழிகாட்டல் | 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 10 மில்லியனுக்கும் அதிகமான மூலதனச் செலவினத்திற்கு அமைச்சின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரியின் இணக்கப்பட்டு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 5.2.4 மற்றும் 5.2.5 ஆம் வழிகாட்டல்கள் | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டிய 2017 ஆம் ஆண்டின் பாதீட்டு வரைபு 2017 திசெம்பர் இல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.<br><br>மேலும், மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரதிகள், வழிகாட்டலினால் குறிப்பிடப்பட்டவாறு, வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | 9.2 ஆம் வழிகாட்டல் | கம்பனி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்றுடன் பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரியில் பதிவு செய்யப்பட்ட நிறுவன அமைப்பு வரைபடமொன்றைக் கொண்டிருக்கவில்லை. புதிய பதவியணியினரை உருவாக்கும் நிகழ்வில், அல்லது மிகைப் பதவியணியினர் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில், கம்பனி பொது முயற்சிகள் திணைக்களத்துடன் கலந்தாலோசிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (vii) | 9.3 ஆம் வழிகாட்டல் | பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் சபை மற்றும் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டங்களினை கம்பனி கொண்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடு அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 1,785.65 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 1,705.17 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை விளைவித்திருந்தமையினால் நிதிசார் விளைவுகளில் ரூபா 80.48 மில்லியன் பற்றாக்குறையொன்றை சுட்டிக்காட்டுகின்றது. மேலும், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மொத்த இலாபம் 0.5 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டதுடன், தேறிய இலாபம் 20 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டது. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நிர்வாகச் செலவினங்கள் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் அதிகரித்தமை இந்தப் பற்றாக்குறைக்கு காரணமாகக் காணப்பட்டிருந்தது.

மேலும் மீளாய்வாண்டிற்கான ஊழியர் ஊதியம், விரிச்செலுத்துகை மற்றும் பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற்கொண்ட பின்னர், முன்னைய ஆண்டிற்கான ரூபா 2,169.3 மில்லியன் பெறுமதி சேர்க்கையுடன் ஒப்பிடுகையில் நாட்டிற்கான கம்பனியின் பெறுமதி சேர்க்கை ரூபா 2,138.13 மில்லியனாகக் காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் முக்கிய கணக்கீட்டு விகிதங்கள் பின்வருமாறு.

| இலாபத்தன்மை விகிதங்கள் (சதவீதம்) | 2017 | 2016 |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை (ஜீபி) | 82.75 | 83.48 |
| தேறிய இலாப எல்லை (என்பி) | 67.63 | 85.33 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) | 12.73 | 18.57 |
| ஈடுபடுத்திய மூலதனம் மீதான திரும்பல் (ஆர்ஓசீஈ) | 14.62 | 17.06 |
| **திரவத்தன்மை விகிதங்கள் (தடவைகளின் எண்ணிக்கை)** | | |
| நடைமுறை விகிதம் | 29.59 | 13.88 |
| விரைவு விகிதம் | 29.59 | 13.88 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கம்பனியின் மொத்த இலாப எல்லை மற்றும் தேறிய இலாப எல்லை முறையே 0.8 சதவீதம் மற்றும் 20.7 சதவீத பற்றாக்குறையாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது திரவத்தன்மை விகிதங்கள் அதிகரித்திருந்தது. மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) மற்றும் ஈடுபடுத்திய மூலதனம் மீதான திரும்பல் (ஆர்ஓசீஈ) 31.4 சதவீதம் மற்றும் 14.3 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டது. ஆகையினால், கம்பனியின் இலாபத்தன்மை குறைவடைந்திருந்த போதிலும், திரவத்தன்மை நிலைமை அதிகரித்திருந்தது.

## 3.2.2 நீண்ட காலத்திற்கு தீர்ப்பனவு செய்யப்படாத பெறவேண்டிய முற்பணம்

2011 இன் 3 ஆம் இலக்க காப்புறுதி தொழில் (திருத்தியது) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சிறிலங்கா இன்சுரன்ஸ் கோப்பரேசன் லிமிட்டட்டாக பிரிக்கும் நோக்கத்திற்கு சிறிலங்கா இன்வெஸ்மென்ட் ஹேல்டிங்ஸ் லிமிட்டட் (எஸ்எல்ஐஎச்எல்) இற்கு கூட்டிணைப்பதற்கு வட்டியில்லா முற்பணம் ரூபா 100 மில்லியனை பரிமாற்றுவதற்கு 2014 இல் சபையினால் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் எஸ்எல்ஐஎச்எல் இனால் 2015 ஆகஸ்ட் 31 இல் அல்லது அதற்கு முன்னர் காசு மூலம் அல்லது பங்கிலாபமொன்றின் மூலம் அது திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 20 வரையும் அது அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

மேற்குறித்த தீர்மானத்தின் பிரகாரம், எஸ்எல்ஐஎச்எல் இனை கூட்டிணைக்கையில், புரிந்துணர்வின் அடிப்படையில் ஒவ்வொருவர்க்கும் ஒரு சாதாரண பங்கினைக் கொண்ட ஆரம்ப பங்குதாரர்களாக இரண்டு நபர்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்த குறிப்பிட்ட இரண்டு ஆரம்ப பங்குகள் நடைமுறைக்கு சாத்தியப்படக்கூடிய மிக விரைவில் திறைசேரி செயலாளர்க்கு கைமாற்றப்படல் வேண்டும். எவ்வாறாயினும், கம்பனிகள் பதிவாளரின் பதிவுகளின் பிரகாரம், மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு பங்குகளும் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரை திறைசேரிச் செயலாளர்க்கு மாற்றஞ்செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4. நிலைபேறான அபிவிருத்தி

## 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளல்

ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல் - 2030 இன் இணக்கப்பாட்டின் பிரகாரம் ஒவ்வொரு பொது நிறுவகங்களும் செயற்படல் வேண்டும். மீளாய்வாண்டு தொடர்பில், லிற்றோ கேஸ் டேமினல் லங்கா (பிரைவட்) லிமிட்டட் அதன் நோக்கெல்லை வரம்பின் கீழுள்ள செயற்பாடுகள் தொடர்பில் எவ்வாறு அளவிடைகளினை மேற்கொள்வது என்பதனை அறிந்திருக்கவில்லை.

அதனைத்தொடர்ந்து, அந்த இலக்குகளினை அடைந்து கொள்வது தொடர்பில் படிக்கற்கள் மற்றும் அவ்வாறான இலக்குகளின் அடைவுகளினை மதிப்பீடு செய்வதற்கான குறிக்காட்டிகளுடன் அதன் செயற்பாடுகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களினை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கு லிற்றோ கேஸ் டேமினல் லங்கா (பிரைவட்) லிமிட்டட் தவறியிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு ஏதேனும் நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்கு பாரியதொரு எண்ணிக்கையான முக்கிய சேவைகளினை வழங்குகின்றது. இது மோசடியினை கண்டுபிடித்தல் மற்றும் தடுத்தல், உள்ளகக் கட்டுப்பாட்டினை பரீட்சித்தல், மற்றும் அமைப்புக்களின் கொள்கைகள் மற்றும் அரச பிரமாணங்களுடன் இணங்குவதனை மேற்பார்வை செய்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. ஆகையினால், உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள் அமைப்பின் அபிவிருத்தியில் முக்கியமானதொரு பாத்திரத்தினை வகிக்கின்றது. கம்பனியின் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள் பற்றி பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக காணப்பட்ட அமைப்பு வரைபடத்தின் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வாளர் கம்பனியின் சபைக்கு நேரடியாகப் பொறுப்புடையவராக காணப்படுகின்ற போதிலும், உள்ளகக் கணக்காய்வாளர் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர்க்கு நேரடியாக பொறுப்புடையவராகக் காணப்படுகின்றார்.

(ஆ) உள்ளகக் கணக்காய்வு நடைமுறை அல்லது கையேடொன்று கம்பனியினால் அறிமுகஞ்செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு திட்டத்திற்கு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன் அனைத்து முக்கியமான பகுதிகளினையும் மேவுகை செய்யக்கூடியதாக முறையான இடர் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளகக் காணக்காய்வின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்பட்டு கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(உ) கணக்காய்விற்கு கிடைக்கக்கூடிய தகவலின் பிரகாரம், சில பரப்புக்கள் உள்ளகக் கணக்காய்விற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. உதாரணம்: பதவியணியினர் சம்பளம்

## 5.2 கணக்காய்வு குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க மற்றும் 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பிஈடி/55 ஆம் இலக்க பொது முயற்சி சுற்றறிக்கைகளின் ஏற்பாட்டின் பிரகாரம், கம்பனியினால் கணக்காய்வு குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. மனித வளங்கள் முகாமைத்துவப் பரப்பு தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.